# பிரிவினை ஒரு பேரிடர்

வரி வடிவம் : டாக்டர் பிரகாஷ் ஜா

காட்சி: ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்துகொண்டிருக்கிறது...

பாடல் :

வாருங்கள் குழந்தைகளே, காண்பிக்கிறேன் உங்களுக்கு பாரதத்தின் ஒரு தோற்றத்தை ...

திலகம் வை இம்மண்ணைத் தொட்டு. தியாகத்தின் பூமி இது.....
வந்தே மாதரம்.....வந்தே மாதரம்.

வாருங்கள் குழந்தைகளே, காண்பிக்கிறேன் உங்களுக்கு பாரதத்தின் ஒரு தோற்றத்தை ...

திலகம் வை இம்மண்ணைத் தொட்டு..... தியாகத்தின் பூமி இது....
வந்தே மாதரம்.....வந்தே மாதரம்

குழந்தை: தாத்தா, ...‘ தாத்தா கேட்டீங்களா இவங்க எவ்வளோ நல்லாப் பாடறாங்க, ?

தாத்தா: வந்தே மாதரம்....வந்தே மாதரம்.... இந்தச் சொற்கள திரும்பத் திரும்பப் பாடணும், கேட்கணுங்கறது போலத் தோணுது.

குழந்தை: இவங்க ஏன் இன்னிக்கு இந்தப் பாட்டப் பாடறாங்க?

தாத்தா: இவங்க ஆகஸ்ட் 14,15 ஆம் நாள் கொண்டாட்டத்துக்காக தயாராகிண்டிருக்காங்க.

குழந்தை: தாத்தா, ஆகஸ்ட் 15 ஆம் தேதி சுதந்திரதினம்னு எனக்குத் தெரியும். ஆனா ஆகஸ்ட் 14 ஆம் தேதி என்ன தாத்தா ?

தாத்தா: ஆகஸ்ட் 14 ஆம் தேதி நம் நாட்டின் பிரிவினை நடந்தது. அதனால நாம அந்த நாள ‘பிரிவினைப் பேரிடர் நினைவுநாள்’னு அனுசரிக்கிறோம் .

குழத்தை: சரி. தாத்தா. பிரிவினைப் பேரிடர்ன்னா என்ன ?

தாத்தா: பிரிவினைன்னா என்னன்னு புரியலையா? பிரிவினைக்கே அர்த்தம் புரியலைனா பேரிடருக்கு அர்த்தம் எப்படிப் புரிஞ்சுப்பே ?

சொல்றேன் கேளுப்பா! நம்மோட இந்த நாடு மொதல்ல ரொம்பப் பெரிசா இருந்துது. ஆனா பின்னாடி இது பிரிக்கப்பட்டது.

குழந்தை: அப்படின்னா பங்குவெச்சிட்டாங்களா?

தாத்தா : ஆமாம் பங்குவெச்சிட்டாங்க. ஆனா பங்குவெக்கறதும்..... பிரிக்கறதும் வேற வேற. ஒங்கிட்ட 10 சாக்லேட் இருக்குன்னு வச்சுக்க. இத

ரெண்டுபேர் பங்கிட்டுக்கணும்னா எப்படி பங்கிட்டுப்பீங்க? ஆளுக்கு அஞ்சு அஞ்சு எடுத்துப்பீங்கல்ல ?..... சரி.... இப்ப ஒங்கிட்ட ஒரு சாக்லேட் தான் இருக்குன்னா என்ன செய்வே ?

குழந்தை : , நா அத ரண்டா ஒடச்சு பங்கிட்டிடுவேன் .

தாத்தா : குழந்தாய் ! ஓடைப்பது அதத்துண்டு துண்டாக்கிக் கொடுப்பது.......இதுதான் பிரிவினை. இதனால் உண்டாகும் வலியும் வேதனையும் தான் பேரிடர்.

குழந்தை : தாத்தா .....இந்தப்பிரிவினை புரிஞ்சுது. ஆனா இந்தப் பேரிடர்.... பிரிவினை .......பேரிடர் ?

தாத்தா : சொல்றேன் .

பாடல் :

வாருங்கள் குழந்தைகளே, காண்பிக்கிறேன் உங்களுக்கு பாரதத்தின் ஒரு தோற்றத்தை ...

திலகம் வை இம்மண்ணைத் தொட்டு. தியாகத்தின் பூமி இது.....
வந்தே மாதரம்.....வந்தே மாதரம்.

வாருங்கள் குழந்தைகளே, காண்பிக்கிறேன் உங்களுக்கு பாரதத்தின் ஒரு தோற்றத்தை ...

திலகம் வை இம்மண்ணைத் தொட்டு..... தியாகத்தின் பூமி இது....
வந்தே மாதரம்.....வந்தே மாதரம்

குழந்தை: தாத்தா . இந்தப்பிரிவினை எப்படி நடந்ததுன்னு கொஞ்சம் வெளக்கமாச் சொல்லுங்களேன்.

தாத்தா : சொல்றேன். சொல்றேன். .... பிரிவினையப்பத்தி, நம்ம நாட்டுப் பிரிவினையப்பத்திச் சொல்றேன் ..... கவனமாக் கேளு ..... பிரிவினையப்பத்தி வரலாற்றாசிரியர்கள் என்ன சொல்லிருக்காங்கன்னு சொல்றேன். கவனமா கேட்டுக்கோ புரிஞ்சுக்கப்பாரு.

நம்ம நாடு மதத்தின் பேரால ரெண்டு பாகங்களாப் பிரிக்கப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் இந்தப்பக்கத்திலேந்து அந்தப் பக்கத்துக்கும் அந்தப் பக்கத்திலேந்து இந்தப்பக்கத்துக்கும் ஓட ஆரம்பிச்சாங்க. நாலாபக்கமும் கூட்டநெரிசல் உண்டாச்சு.

பாடல் :

எங்கு மரபுகளில் பற்றிருக்கிறதோ எப்போதும்
எங்கு மரபுகளில் பற்றிருக்கிறதோ எப்போதும்
அங்குள்ள பாடல்களைப் பாடுகிறேன் நான்
பாரதத்தில் வசிப்பவன் நான்

பாரதத்தைப் பற்றிச் சொல்கிறேன் நான்
எங்கு மரபுகளில் பற்றிருக்கிறதோ எப்போதும்

சூத்திரதாரர் 1 : ஒருங்கிணைந்த பாரதத்தின் பிரிவினை என்பது, இதற்கு முன் எப்போதும் இல்லாத மக்களின் புலம் பெயர்வு, கட்டாய வெளியேற்றம் ஆகியவற்றின் வேதனைக் கதை.

சூத்திரதாரர் 2 : முற்றிலும் மாறுபட்ட சூழலில் லட்சக்கணக்கான மக்கள் அந்நியர்களுக்கு மத்தியில் புதிய இருப்பிடத்தைத் தேடிக்கொண்டிருந்த கதை இது.

சூத்திரதாரர் 1 : நம்பிக்கை மற்றும் மத அடிப்படையிலான ஒரு வன்முறைப் பிரிவின் கதையைத் தவிர, வேறொரு விஷயத்தைக் குறித்த கதையுமாகும் இது.

சூத்திரதாரர் 2 : அது பல்லாண்டுகளாக இருந்துவந்த வாழ்க்கை முறையும் சகவாழ்வு சகாப்தமும் எப்படி திடீரென்று வியத்தகு முறையில் முடிந்தது என்பதைக் குறித்த கதை.

சூத்திரதாரர் 1 : சுமார் 60 இலட்சம் இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் மற்ற மதத்தினர்கள் எங்கிருந்து வந்தனரோ அந்தப் பகுதி பின்னர் மேற்குப் பாகிஸ்தானாக மாறியது.

சூத்திரதாரர் 2 : பஞ்சாப், தில்லி போன்ற பாரதத்தின் பல பகுதிகளிலிருந்து 65 இலட்சம் இஸ்லாமியர்கள் மேற்குப் பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டனர்.

சூத்திரதாரர் 1 இருபது இலட்சம் இந்துக்களும் மற்ற மதத்தினரும் கிழக்கு வங்காளத்திலிருந்து மேற்கு வங்காளத்திற்கு வந்தனர். பின்னர் கிழக்குவங்காளம் கிழக்குப் பாகிஸ்தானாக மாறியது,

சூத்திரதாரர் 2 : 1950 ஆம் ஆண்டில் மேலும் 20 லட்சம் இந்துக்களும் மற்ற மதத்தினரும் மேற்கு வங்கத்துக்கு வந்தனர்.

சூத்திரதாரர் 1 : பத்து லட்சம் இஸ்லாமியர்கள் மேற்கு வங்கத்திலிருந்து கிழக்குப் பாகிஸ்தானுக்குச் சென்றுவிட்டனர்.

சூத்திரதாரர் 2 : இந்தப் பேரிடரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 5 லட்சம் என்று சொல்லப்படுகிறது..

சூத்திரதாரர் 1 : ஆனால் இந்த எண்ணிக்கை ஐந்து முதல் பத்து லட்சம் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சூத்திரதாரர் 2 : இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, இந்தப் பிரிவினையியில் தான் மதத்தின் பெயரால் மிகப்பெரிய அளவிலான கொலைகள் நடந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சூத்திரதாரர் 1 : பல நூற்றாண்டுகள் பழமையான சமூக அமைப்பும் நம்பிக்கையுமயும் முறிந்தது.

பாடல்:

பாய்கின்றன கண்களிலிருந்து இந்த வலியின் நீரோடைகள்,
பாய்கின்றன கண்களிலிருந்து இந்த வலியின் நீரோடைகள்,
இழந்த வாழ்க்கை, இழந்த நண்பர்கள்.
இழந்த வாழ்க்கை, இழந்த நண்பர்கள்.
பாய்கின்றன கண்களிலிருந்து இந்த வலியின் நீரோடைகள்,
பாய்கின்றன கண்களிலிருந்து இந்த வலியின் நீரோடைகள்,
இழந்த வாழ்க்கை, இழந்த நண்பர்கள்.
இழந்த வாழ்க்கை, இழந்த நண்பர்கள்.

குழந்தை: தாத்தா.... இவங்களோட வீடு வாசலெல்லாம் பிடிங்கிட்டாங்கல்ல? இதக் கேட்டதுமே எனக்கு பயமாருக்குது.

தாத்தா: இது பயப்படவேண்டிய விஷயந்தான் பேராண்டி. அப்ப வாழ்ந்த மக்கள் என்னவெல்லாம் அனுபவித்திருப்பாங்கன்னு நீயே யோசிச்சுப் பாரு?

குழந்தை: தாத்தா .... அந்தக் காலத்துல என்னப்போல குழந்தைகளும் இருந்திருப்பாங்க...அவங்க நெலம என்னவாயிருக்கும்?

தாத்தா: ஆம்... ஒன்னப்போல லட்சக்கணக்கான குழந்தைங்க அதப் பார்த்திருப்பாங்க, அது அவங்க மனசிலேந்து அகலவே இல்லை... அந்தக் காட்சியை நினைத்து அவங்க இன்னிக்கும் பயப்படறாங்கப்பா.

குழந்தை: இதப்பத்தி இன்னும் கொஞ்சம் சொல்லுங்க தாத்தா...

தாத்தா: சொல்றேன் கேளப்பா ....

பாடல்

> பாருங்கள் வங்கத்தை, ஒவ்வோர் அடியிலும் பசுமை.
> இங்குள்ள ஒவ்வொரு குழந்தையும் நாட்டுக்காக அர்ப்பணிக்கப் போகிறது தன் உயிரை.
> வாருங்கள் குழந்தைகளே, காண்பிக்கிறேன் உங்களுக்கு பாரதத்தின் ஒரு தோற்றத்தை ...
> திலகம் வை இம்மண்ணைத் தொட்டு..... தியாகத்தின் பூமி இது...
> வந்தே மாதரம்... வந்தே மாதரம்...
> வந்தே மாதரம்... வந்தே மாதரம்...

ஆசிரியர் : ஸிட் டௌன்.

குழந்தைகள் : குட் மார்னிங் ஸார்.

ஆசிரியர் : குட் மார்னிங் .

குழந்தைகள் : ஸார் .நீங்க பிரிவினையப்பத்திச் சொல்லிட்டிருந்தீங்களே,..... அப்ப நீங்க சொன்னீங்க நிறைய இழந்துட்டாங்கன்னு......இப்ப பிரிவினையப்பத்தி இன்னுங்கொஞ்சம் சொல்லுங்களேன்.

ஆசிரியர் : 1947 ஆம் ஆண்டு ஃபிப்ரவரி மாதம் 20 ஆம் நாளன்று, பிரிட்டிஷ் பிரதம மந்திரி கிளெமென்ட் அட்லி ஹவுஸ் ஆஃப் காமன்ஸில் அறிவித்தார்...

பெண்குழந்தை : இதுக்குமேல நான் சொல்றேன் ஸார். எனக்கும் தெரியும்....

ஆசிரியர் : குட்.....சொல்லு.....

பெண் குழந்தை: நண்பர்களே ! 1948 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் நாளுக்கு முன்னால அரசாங்கம்.......

ஆசிரியர் : அம்மா பூனம் ! அங்கேந்தில்ல ......இங்க வந்து எல்லாரும் கேக்கறமாதிரிச் சொல்லு.

பெண் குழந்தை : சரி ஸார்...

நண்பர்களே 1948 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் நாளுக்கு முன்னால அரசாங்கம்..... அதிகாரத்தை கை மாற்றி பாரதத்தை விட்டு வெளியேற முடிவெடுத்துள்ளது .

குழந்தை 2 : ஸார் நான் .......

ஆசிரியர் : சரி, சொல்லு.....

குழந்தை 2 : இருப்பினும் முழுச் செயல்முறையும் மவுண்ட்பேட்டன் பிரபுவால் ஒரு வருடத்திற்கு முன்பே துரிதப்படுத்தப்பட்டிருந்தது.

குழந்தை 3: ஆமா ஸார்.... லண்டனிலிருந்து அதிகாரத்தை மாற்றுவதற்கான ஒப்புதலுடன் 1947 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் நாளன்று மவுண்ட்பேட்டன் பிரபு புது தில்லி திரும்பினார்.

குழந்தை 4: எனக்கும் நெனவுக்கு வருது,.......1947 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2 ஆம் நாளன்று நடந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டத்தில் பிரிவினைத் திட்டம் பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

குழந்தை 5: ஆமா ஸார்.... பாரதத்தைப் பிரிக்கும் முடிவு ஒரு முன்நிபந்தனை போன்றதா இருந்தது. பாரதம் போன்ற ஒரு நாட்டை மத அடிப்படையில் பிரிக்கணுங்கற இந்தத் திட்டத்துக்குப் பரவலா எதிர்ப்புக் கிளம்பித்து.

பெண்குழந்தை : இந்தப் பிரிவினைல தங்கள் சுயநலத்தயும் ஒளிமயமான எதிர்காலத்தயும் கண்ட தலைவர்கள் மட்டுமே இந்தப் பிரிவினைக்கு மனதளவில தயாராக இருந்தாங்கன்னு கூறப்படுகிறது.

ஆசிரியர் : சபாஷ் குழந்தைகளே..... உங்களுக்கு நிறைய தெரிஞ்சிருக்கு. இப்ப நம்ம இன்னிக்குப் பாடத்தப்பார்க்கலாம். அதற்கு முன்னால நாம் ஒரு சின்ன இடைவேளை எடுத்துக்கலாம்.

எல்லாக் குழந்தைகளும் : சரி ஸார்......

பாடல்:

வந்தேமாதரம், வந்தேமாதரம்
வந்தேமாதரம், வந்தேமாதரம்
வந்தேமாதரம், வந்தேமாதரம்
வந்தேமாதரம், வந்தேமாதரம்.

சூத்திரதாரர் 1: அண்ணே! பிரிவினை பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

சூத்திரதாரர் 2: தம்பி, பிரிவினையை ஊக்குவிப்பது சமுதாயத்தை மேம்படுத்தும். வெவ்வேறு சமூகங்கள் தங்கள் சொந்த உரிமைகளைப் பெறுவார்கள்.

சூத்திரதாரர் 1: இல்லை இல்லை, பிரிவினையால் அப்படி எதுவும் நடக்காது. ஒற்றுமையால் மட்டுமே சமுதாயத்தை முன்னேறச் செய்ய முடியும், ஒற்றுமையால் மட்டுமே சமுதாயம் வளர்ச்சி பெற முடியும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து வளர்ச்சிப் பாதையில் முன்னேறவேண்டும்.

சூத்திரதாரர் 2: நீ சொல்வது கேட்க நன்றாக் இருக்கிறது ஆனால் பிரிவினையாலேயே அனைத்தும் நடைபெறமுடியும் என்பதே உண்மை .

சூத்திரதாரர் 1: இல்லை இல்லை நாம் அனைவரும் இணைந்து நாட்டை முன்னேற்றப்பாதையில் எடுத்துச் செல்லவேண்டும். பிரிவினையின் பேரிடரை இல்லாமலாக்க வேண்டும்.

சூத்திரதாரர் 2: உனக்கு என்ன தோன்றுகிறது.... இந்தச் செய்தியை நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுத்த முடியுமா?

சூத்திரதாரர் 1: ஏன் முடியாது ? இதற்கு நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். இந்த ஒற்றுமைதான் நமது பாரம்பரியம். இதை பாதுகாத்து வைக்க வேண்டும்.

சூத்திரதாரர் 2: சரி, ஆனால், ஒன்றுபட்ட பாரதத்தின் பிரிவினையின்போது வேறு என்னென்ன நடந்தது என்று சொல்லுங்கள்...

சூத்திரதாரர் 1 : இதைப்பற்றி அதை அனுபவித்தவர்களே சொல்வார்கள்.

பாடல்

வந்தேமாதரம், வந்தேமாதரம்
வந்தேமாதரம், வந்தேமாதரம்
வந்தேமாதரம், வந்தேமாதரம்
வந்தேமாதரம், வந்தேமாதரம்.

குழந்தைகள் : குட் ஆஃப்டர்நூன் ஸார்.

ஆசிரியர் : குட் ஆஃப்டர்நூன்..... ஸிட் டௌன்.... சரி மேல சொல்றேன் கேளுங்க.... அகில பாரதீய முஸ்லீம் லீக்கின் கூட்டம் 1947 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9 ஆம் நாளன்று புது தில்லி இம்பீரியல் ஹோட்டலில் நடைபெற்றது.

குழந்தை : இந்திய முஸ்லீம் லீக், அப்ப இருந்த காங்கிரஸ் தவிர வேற பல தலைவர்களோட திறமயின்ம, பொருத்தமற்ற பேரார்வம் காரணத்தால இந்த நடவடிக்கய கடுமையா எதிர்க்க முடியல. காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் முஸ்லீம் லீக் ஜின்னாவுக்கும் இடையே ஏற்பட்ட மோதலாலேயே  நாடு பிரிந்தது.

பெண்குழந்தை:  ஸார்....ஸார்.... இதுக்குமேல நடந்தது எனக்குத் தெரியும்.

ஆசிரியர் : அம்மா பூனம் உனக்கு எல்லாம் தெரியும்னு தோணுதே. அறிவைப் பகிர்ந்துகொள்வதால அது வளருது. அதுனால அறிவப் பகிர்ந்துக்கோ.

பெண்குழந்தை : நண்பர்களே.....பிரிவினை கோரும் பிரேரணை ஏறக்குறைய ஒருமனதாக அங்கு நிறைவேற்றப்பட்டது.

குழந்தை 2 : இதற்கு ஆதரவா 300 வாக்குகள் பதிவாச்சு. எதிரா 10 வாக்குகள் மட்டுமே பதிவாச்சு .

குழந்தை 3: பாரதமும் பாகிஸ்தானும் ரெண்டு பாகங்களாப் பிரிஞ்சிது .

குழந்தை 5 :மத அடிப்படயில வங்காளத்தோட கிழக்குப்பகுதியும் பிரிஞ்சு பாகிஸ்தானோட இணஞ்சிடுத்து.

தாத்தா: 1946,1947 ஆம் ஆண்டுகள்ல பாரதத்தோட பல பகுதிகள உலுக்கிய வகுப்புவாத வன்முறையோட வீச்சப்பத்தியும் கொடூரத்தப்பத்தியும் புத்தகங்கள்ல பல இடங்கள்ல விரிவா எழுதப்பட்டிருக்கு.

1947 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 ஆம் நாள் இந்துக்கள், சீக்கியர்களோட ஊர்வலத்தில போலீஸ்காரங்க துப்பாக்கிச் சூடு நடத்தினாங்க.

சூத்திரதாரர் 2: மார்ச் மாதம் 06 ஆம் நாளன்று காலை, அமிர்தசரஸ், ஜலந்தர், ராவல்பிண்டி, முல்தான் மற்றும் ஸியால்கோட் உட்பட பஞ்சாபின் அனைத்து நகரங்களும் கலவரத்தின் தீயில் மூழ்கின.

.சூத்திரதாரர் 1: பஞ்சாபுடன் ஒப்பிடுகையில், வங்காளத்தில் பல பத்தாண்டுகளாக தொடர்ந்த புலப்பெயர்வு மற்றும் மறுவாழ்வின் வடிவம் முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது.

சூத்திரதாரர் 2: வங்காள மக்கள் மிகவும் துரதிர்ஷ்டசாலிகளாக இருந்தனர்......

சூத்திரதாரர் 1: ஏன்?

.சூத்திரதாரர் 2: ஏனெனில் வங்காள மக்களுக்கு இருமுறை புலம் பெயரவேண்டி வந்தது.

சூத்திரதாரர் 1: இரண்டு முறையா ?

சூத்திரதாரர் 2 : ஆமாம் இரண்டு முறை.

சூத்திரதாரர் 1: ஒருமுறை அவர்கள் அனைவருக்கும் தங்கள் வீடுகளை விட்டு கிழக்கு பாகிஸ்தானுக்கு வரவேண்டியிருந்தது.

சூத்திரதாரர் 2: பின்னர் இங்கிருந்து ஓடி மேற்கு வங்கத்திற்கு வர வேண்டியதாயிற்று. பிரிவினையால் ஏற்படும் நெருக்கடியின் அளவை அங்குள்ள அதிகாரிகள் குறைத்து மதிப்பிட்டனர், தம்பி.......

சூத்திரதாரர் 1: ஆயிரக்கணக்கான இந்துக் குடும்பங்கள் டாக்காவிலும் அதன் சுற்றுப்புறங்களிலிருந்தும் வெளியேறி ஸியால்தாவை அடைந்தன.

சூத்திரதாரர் 2: அவர்கள் அவ்வளவு எளிதில் சென்று சேரவில்லை... வழியில் ஒவ்வொரு பெண்ணின் நகைகளும் பறித்துச் செல்லப்பட்டன... அவர்கள் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர் ...

சூத்திரதாரர் 1: பெண்குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டனர்.

சூத்திரதாரர் 2: பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என அனைவரும் தவறாக நடத்தப்பட்டனரா !

சூத்திரதாரர் 1: ஆமாம், இது உண்மை .... பிரிவினையின்போது பெண்கள் பெரும் இழப்பைச் சந்தித்தனர்

சூத்திரதாரர் 2: லட்சக்கணக்கான குடும்பங்கள் உறவினர்களிடமிருந்து பிரிந்தன.

சூத்திரதாரர் 1: இதுமட்டுமின்றி மக்கள் உயிருடன் ரயிலில் ஏறினர். ஆனால், அவர்களின் இறந்த உடல்களே குவியலாக இங்கு வந்து சேர்ந்தன.

குழந்தை அழத் துவங்குகிறது.....

தாத்தா: ஏன் அழறே குழந்தே...?? அழாதே அமைதியா இரு.

குழந்தை: தாத்தா.... டாக்காவிலேந்து வந்த அகதிகளுக்கு என்ன ஆச்சு, தாத்தா ? அவங்களோடதெல்லாம் பறிக்கப்பட்டதா ?

தாத்தா: இதற்கும் விசித்திரமான கதை இருக்கு. அவங்க முகவரியே இல்லாதவங்களாயிட்டாங்க......

குழந்தை : ஏன் அப்படி ?

தாத்தா : அவங்க தங்களோட சொந்தவீடுகளை விட்டிட்டு இரண்டாவதுமுறை இந்த நாட்டுக்கு வந்ததுமே தங்கள் நாட்டிலேயே அவங்க அகதிகளா வாழத்தொடங்கினாங்க ........

பாடல்

பாய்கின்றன கண்களிலிருந்து இந்த வலியின் நீரோடைகள்,
பாய்கின்றன கண்களிலிருந்து இந்த வலியின் நீரோடைகள்,
இழந்த வாழ்க்கை, இழந்த நண்பர்கள்.
இழந்த வாழ்க்கை, இழந்த நண்பர்கள்.
கதாபாத்திரம் 3: கிழக்கு பாகிஸ்தானிலிருந்து பலர் வங்காளத்திற்கு வந்ததால். தங்கள் உறவினர்களை உடன் வைத்துக்கொள்ள யாருடைய வீட்டிலும் ஒரு அங்குல இடங்கூட எஞ்சி இருக்கவில்லை....

கதாபாத்திரம் 4: சகாவ், நாராயண் கஞ்ச், பாரீஸால் மற்றும் சாந்த்பூர் ஆகிய இடங்களிலிருந்து கல்கத்தாவிற்கு அகதிகளைக் கொண்டு வர, பதினைந்து நீராவிக் கப்பல்களை ஏற்பாடு செய்தது மேற்கு வங்க அரசு.

கதாபாத்திரம் 3: கிழக்கு பாகிஸ்தானிலிருந்து மக்கள் நீர்வழிகள் மூலம் புலம்பெயர்ந்தனர்....பல படகுகள்....நீரில் மூழ்கின....சில நாட்களுக்குப் பிறகு நீரின் மேற்பரப்பில் இறந்த உடல்கள் மட்டுமே மிதந்தன...

கதாபாத்திரம் 3+4: அப்படி என்ன சிறப்பு இருந்தது நம் நிலத்திற்கு? எதை அடைய நம்மிடமிருந்து அனைத்தும் பறிக்கப்பட்டது...

கதாபாத்திரம் 3: வங்கம், பஞ்சாப், குஜராத், ஸிந்த் என எல்லா இடங்களிலும் பிரிவினையின் நெருப்பு மூண்டது

கதாபாத்திரம் 4: ஸிந்த் மக்கள் புலம்பெயர்ந்து இங்கு வந்தார்கள், ஆனால்... ஸிந்த் நமக்குக் கிடைக்கவில்லை...

சூத்திரதாரர் 1: ஸிந்த் என்றதும் நினைவுக்கு வந்தது - ஸிந்திலிருந்து அதிக எண்ணிக்கையிலான ஸிந்திக் குடும்பங்கள் ராஜஸ்தானுக்கு வந்தன.

(ஸிந்திக் குடும்பங்களாக)

ஸிந்தி ஆண்மகன்: பிரிவினைக்குப் பிறகு, பாகிஸ்தானிலிருந்து லட்சக்கணக்கான அகதிகள் பாரதத்திற்கு வந்தனர், அதிக எண்ணிக்கையில் அகதிகள் வந்த மாநிலங்களில் ராஜஸ்தானும் ஒன்று.

ஸிந்திப் பெண்: ராஜஸ்தானில் எங்களைப் போன்ற அகதிகளுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு ஏற்பாடு செய்வது பெரிய சவாலாக இருந்தது.

ஸிந்தி ஆண்மகன்: எங்கள் வருகையால் ராஜஸ்தானின் கலாச்சார அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டன. நாங்கள் தனிப்பட்டவர்களாகக் காணப்பட்டோம். பின்னர் எங்களது கலாச்சாரம், மொழி, பழக்கவழக்கங்கள் அனைத்தும் மாறிவிட்டன.

ஸிந்திப் பெண்: நான் ஸிந்தில் பெரிய தொழிலதிபராக இருந்தேன். இங்கு எங்கள் குழந்தைகளுக்கு இரண்டு நேரத்திற்கான ரொட்டிகூட கிடைக்கவில்லை

ஸிந்தி ஆண்மகன்: அங்கு எனது கடைகள், வீடுகள் அனைத்தும் சூறையாடப்பட்டன.

ஸிந்திப் பெண்: ஐயா! நான் என் குழந்தைகளை இடுப்பில் வைத்துக்கொண்டு ஓடிய அந்த இரவை எப்படி மறப்பது?

ஸிந்தி ஆண்மகன்: ஓடி ஒளிந்து எங்களைக் காப்பாற்றிக்கொண்டு எப்படியோ ராஜஸ்தான் மாநிலத்தின் பிகானேரிலுள்ள தூரத்து உறவினர் ஒருவரின் வீட்டை அடைந்தோம்.

ஸிந்திப் பெண்: எங்கள் உறவினர்கள் பலர் வழியிலேயே பிரிந்துவிட்டனர். இன்றுவரை அவர்களை எங்களால் சந்திக்க முடியவில்லை. சிலர் ஜுன்ஜுனுவில் தங்கினர்.

பாவம். எங்கள் உறவினர்களும் எத்தனை நாட்கள் எங்களைத் தங்களுடன் வைத்துக் கொள்ள முடியும்? கடைசியில் வேறு வழியின்றி அகதிகள் முகாமுக்கு வரவேண்டியதாயிற்று. மகிழ்ச்சி நிறைந்த ஒரு குடும்பம், கிராமம், நகரம் எப்படி அழியும் என்று யாராவது எங்களிடம் கேளுங்கள்.

(இருவரும் உரக்க அழத் தொடங்குகிறார்கள்)

குழந்தை 4 : பாகிஸ்தான் மக்கள் ஜம்மு காஷ்மீரை நோக்கி ஓடினாங்க. பஞ்சாபை நோக்கி வந்தாங்க. குஜராத், வங்காளம், ராஜஸ்தான் ஆகிய இடங்களுக்கும் லட்சக்கணக்கான மக்கள் வந்தாங்க.

பாடல்

பாய்கின்றன கண்களிலிருந்து இந்த வலியின் நீரோடைகள்,
பாய்கின்றன கண்களிலிருந்து இந்த வலியின் நீரோடைகள்,
இழந்த வாழ்க்கை, இழந்த நண்பர்கள்.
இழந்த வாழ்க்கை, இழந்த நண்பர்கள்.

குழந்தை: தாத்தா...இப்ப எனக்கு எதுவும் கேக்க வேணாம்....

தாத்தா: ஆமாமாம்பா. நம் நாட்டு வரலாற்றில இது ஒரு இருண்ட அத்தியாயம். யாராலும் கேக்க முடியாத அளவுக்கு நெஞ்ச உலுக்கும் சம்பவம்... கல் நெஞ்சம் கொண்டவனும் இதக் கேட்டதும் உருகிடுவான் ... நீ கொழந்த.

இப்ப நாம என்ன செய்யணும்னு சொல்றேன் .....

சூத்திரதாரர் 1+2: வாழ்க்கையின் ஒவ்வொரு காலையும் புன்னகையால் நிரம்பி வழியும் இடத்தில்... அங்குள்ள காட்சியைப் பார்த்ததும் கண்ணீர் கூட ரத்தமாக மாறியது....

கதாபாத்திரம் 3+4 : பயம், போர், கொடுமையுடன் நான், எடை போட்டுப் பார்க்கும்போது உனது சுமையால் தோள்களில் அதிக வலி இல்லை....

கதாபாத்திரம் 1 : பிரிவினையின் கொடூரத்தில் உயிரிழந்த மற்றும் புலம்பெயர்ந்த வலியால் பாதிக்கப்பட்ட லட்சக்கணக்கான பாரதீயர்களுக்கு நூற்றுக்கணக்கான வணக்கங்கள்.

கதாபாத்திரம் 2 : நமது நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

கதாபாத்திரம் 3 : பிரிவினை அரசியல் விளையாட்டில், ஒரு சகோதரனுக்கு எதிராக மற்ற சகோதரனின் மூளையில் நஞ்சு நிரப்பப்பட்டது .

கதாபாத்திரம் 4 : இந்த நஞ்சால், மனிதனே மனிதனை வெட்டினான், மனிதனே மனிதனைப் பிரித்தான், மனிதனே மனிதனை இழந்தான். மேலும் நமது ஒன்றுபட்ட பாரதம் சிதைந்தது.

தாத்தா : நடந்தது நடந்திடுத்து... புகழ்பெற்ற நம்ம பிரதமர் என்ன சொல்லிருக்காருன்னு கேளு....

பிரதமரின் குரல் : நாட்டின் பிரிவினையின் வலியை ஒருபோதும் மறக்க முடியாது. வெறுப்பினாலும் வன்முறையினாலும் லட்சக் கணக்கான நமது சகோதர சகோதரிகளுக்கு புலம்பெயர்ந்து செல்லவேண்டி இருந்தது. அவர்கள் உயிரையும் இழக்க நேரிட்டது. அவர்களின் போராட்டம் மற்றும் தியாகத்தின் நினைவாக ஆகஸ்ட் 14 ஆம் நாளை 'பிரிவினைப் பேரிடர் நினைவு நாளாகக்' கொண்டாட முடிவு செய்துள்ளோம்..

கதாபாத்திரம் 1: நம்மிடையே யாராவது சாதி மதத்தை வைத்து ஏமாற்றினாலோ, அல்லது சூழ்ச்சி செய்தாலோ, நாம் ஏமாந்துவிடக் கூடாது...

எல்லோரும் : நாம் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கக்கூடாது.

கதாபாத்திரம் 1 :பாரதநாட்டை ஒன்றிணைந்திருக்குமாறு வைத்திருக்க வேண்டும்.

எல்லோரும்: . பாரதநாட்டை ஒன்றிணைந்திருக்குமாறு வைத்திருக்க வேண்டும்.

.கதாபாத்திரம் 4 : இனி நாம் யாருடைய அரசியல் சூழ்ச்சியிலும் சிக்க மாட்டோம்.

எல்லோரும்: இனி நாம் யாருடைய அரசியல் சூழ்ச்சியிலும் சிக்க மாட்டோம்.

கதாபாத்திரம் 4 : ஒருமைப்பாடு மற்றும் செறிவுடன், நமது பாரத அன்னையை மகிழ்ச்சியுடனும் அமைதியுடனும் மேம்படுத்துவோம்.

எல்லோரும்: நம் பாரத அன்னையை வளர்ச்சியடையச் செய்வோம்.

ஆம் வாங்க .....நாம் அனைவரும் உறுதியெடுப்போம் .....

பாரத் மாதா கீ ஜே .....பாரத் மாதா கீ ஜே

பாடல்:

வந்தேமாதரம், வந்தேமாதரம்
வந்தேமாதரம், வந்தேமாதரம்
வந்தேமாதரம், வந்தேமாதரம்
வந்தேமாதரம், வந்தேமாதரம்.